# உதயன்

விலை ரூபா 6.00

பக்கங்கள் -04

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 31 சனிக்கிழமை (13-05-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:144


நேற்று முன்தினம் இரவு அரியாலையில் நடந்த 5மணி நேரம் சமரை அடுத்து

## படையினரின் புதிய பாதுகாப்பு நிலைகள் கொழும்புத்துறைக்குக் கிழக்கே மாற்றம்

கொழும்பு,மே13

அரியாலைப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட படையினரின் பாதுகாப்பு வலயம் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக பின்னால் நகர்ந்து கொழும்புத்துறைக்கு கிழக்கே புதிய பாதுகாப்பு நிலைகளை மீண்டும் ஏற்படுத்தவேண்டிய நிலை படையினருக்கு ஏற்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் இவ்வாறு நேற்று மாலை அறிவித்தது.

ஐந்து மணித்தியாலங்கள் அங்கு சண்டை இடம்பெற்றது என்றும் -

இதில் புலிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

தனங்களப்புக்கு வடக்கே நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணி முதல் மோதல்கள் இடம் பெற்றன என்றும் -

இந்த மோதல்களில் இரண்டு அதிகாரிகளும் ஏழு படையினரும் உயிரிழந்தனர் என்றும் -

86 படையினர் காயமடைந்தனர் என்றும் - பாதுகாப்புத்தரப்புத் தெரிவித்தது.

அதேசமயம் பாதுகாப்புப் படையினர் கூட்டாக நேற்று மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது பூநகரிக்கு வடக்கேயுள்ள சங்குப்பிட்டி இறங்குதுறை தாக்கி அழிக்கப்பட்டது என்றும் -

இந்தப் பகுதியிலுள்ள புலிகளின் தொலைத் தொடர்புக் கோபுரமும் தகர்க்கப்பட்டதாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இதன் காரணமாக அரியாலை யுத்த முனைக்கு புதிய படைகளை அனுப்பி வைப்பதிலும், பொருள்களை எடுத்துச் செல்வதிலும் தகவல் தொடர்பை மேற்கொள்வதிலும் பல்வேறு பிரச்சினைகளை விடுதலைப் புலிகள் எதிர்நோக்கியுள்ளனர் என்றும் அந்த நிலையம் தெரிவித்தது. (4ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேல், பாகிஸ்தானிலிருந்து பொம்மர்கள், நவீன ஆயுதங்கள்

## இலங்கைப் படைகளுக்கு

கொழும்பு,மே13

**யாழ்.குடாவில் சண்டையில் ஈடுபட்டுள்ள படையினருக்காக இஸ்ரேலில் இருந்து குண்டு வீச்சு விமானங்கள், பாகிஸ்தானிலிருந்து பல குழல் எறிகணை செலுத்திகள் மற்றும் நவீன ஆயுததளபாடங்களை அவசரமாகக் கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் ஒப்பந்தங்களைச் செய்துள்ளது என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தீவிரப்படுத்தும் நோக்குடன் -

யாழ்.குடாநாட்டில் சண்டையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு அதிநவீன ஆயுதங்கள், போர் விமானங்களை கொள்வனவு செய்யவிருப்பதாக கடந்த வாரம் அரசாங்கம் அறிவித்திருந்தது.

இஸ்ரேலிடமிருந்து ஏழு கிபிர்ரக குண்டுவீச்சு விமானங்களை கொள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## படைக்கு நவீன ஆயுதங்கள் சில வாரங்களில் கிடைக்கும்

### துருப்புகளுக்கு எழுதிய கடிதத்தில் ஜனாதிபதி தகவல்

கொழும்பு,மே13

வடக்கில் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களில் இருந்தும் விடுதலைப்புலிகளை அகற்ற அரசுபோராடும். இதற்காக படையினருக்கு நவீன போர்த்தந்திரோபாய வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதோடு ஆயுதங்களும் பெற்றுக் கொடுக்கப்படும். பெரும்பாலும் நவீன ஆயுதங்கள் அடுத்த சில வாரங்களில் அவர்களுக்கு கிடைக்கும்.

-இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு அவர் எழுதியுள்ள பகிரங்க கடிதத்திலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழம் எட்டப்படுமானால் கருணாநிதிக்கு மகிழ்ச்சியாம்



"போராட்டத்தின்மூலமோ அல்லது பேச்சு மூலமோ தமிழீழ இலட்சியம் எட்டப்பட்டால் அது குறித்து தி.மு.க.மகிழ்ச்சி அடையும்" என்று தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

மாநில சட்டப் பேரவையில் நேற்று இடம்பெற்ற விவாதம் ஒன்றில் பேசுகையில் இவர் இப்படித் தெரிவித்தார்

"தமிழீழம்" என்ற பெயரில் மாநிலத்தில் வன்முறைகள், பிரசாரங்கள் இடம்பெறுவதை எக்காரணம் கொண்டும் மாநில அரசு அனுமதிக்க மாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் செல்வகுமார்:-"கடந்த பத்து வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தமிழகத்தில் தலைதூக்கியுள்ளன. அவர்களுக்கு ஆதரவாக சில இயக்கங்களும் மற்றும் தலைவர்கள் சிலரும் செயற்படுகின்றனர் - என்று தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள்கட்சி உறுப்பினர் ஜி.கே. மணி உரையாற்றுகையில்-"இலங்கையில் தமிழர்கள் தங்களது உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை தமிழ்மாநில காங்கிரஸார் கொச்சைப் படுத்தக் கூடாது"- என்றார்.

## நல்லை ஆதீன முதல்வரும் யுத்த நிறுத்தம் கோருகிறார்

யாழ்ப்பாணம்,மே13

"இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வு ஏற்படவேண்டுமாயின் உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்; சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். அதற்கு விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் முன்வரவேண்டும்"

இப்படிக் கோரியுள்ளார் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள்.

தற்போதுள்ள நிலைமை தொடர் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போக்குவரத்து வசதியின்மை, போதிய வருமானமின்மை போன்றவற்றால் பாதிகப்பட்டு இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்கள் இன்று உருவாகியுள்ள நிலைமையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள சுமைகளைத் தாங்கமுடியாத நிலையில் அவர்கள் இருக்கும்போது மேலும் புதிய நெருக்கடிகள் இன்று எழுந்துள்ளன. இந்த நெருக்கடிகளிலிருந்து மக்கள் மீளவேண்டுமாயின் உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் - இப்படி அவர் தெரிவித்தார். (உ-3)

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில்

## நேற்று 4மணி நேரம் ஊரடங்கு தளர்வு!

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.மாநகரசபை மற்றும் சாவகச்சேரிப் பிரதேசசபைப் பிரதேசங்களில் கடந்த புதன்கிழமை காலை 6மணிக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் சுமார் ஐம்பது மணித்தியாலங்களின் பின்னர் நேற்றுக் காலை 8.30 மணி முதல் 4மணி நேரம் தளர்த்தப்பட்டது.

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் ஆகியோர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கப்பட்ட 4மணி நேரமும் யாழ்.நகரம் அல்லோலகல்லோலம்

யாழ்ப்பாணம்,மே13

கடந்த புதன்கிழமை காலை அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை நான்கு மணி நேரம் தளர்த்தப்பட்ட சமயம் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஊரடங்கு நடைமுறையில் இருந்த யாழ்.மாநகரசபைப் பிரதேசம் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைப் பகுதி ஆகியவற்றிலிருந்து குடாநாட்டின் பிற இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டது தொடர்பான அறிவித்தல் வெளியானதும் -

மக்கள் இடம்பெயர்வதிலும், வர்த்தக நிலையங்களில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதிலும் முழு மூச்சாக ஈடுபட்டனர்.

வர்த்தக நிறுவனங்களிலிருந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### தவறிவிட்டது

பிரான்சிஸ்பிள்ளை பெனிக்கா ரஜனி ஆகிய எனது 655371923V இலக்கம் உடைய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் 11.05.2000 அன்று யாழ். வைத்தியசாலைக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டன. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தற்போதைய நாட்டு நிலைமையை மனதில் கொண்டு நாவலர் பாடசாலை ஒழுங்கை, கோப்பாய் தெற்கு என்னும் முகவரியில் அல்லது பங்குத்தந்தை, மரியன்னை தேவாலயம், கோப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(76145)

### தவறிவிட்டது

கொழும்புத்துறை 3ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த கந்தையா இராஜேஸ்வரி, கந்தையா லக்ஷிகா ஆகியோரது விசேட, பாடசாலை அடையாள அட்டைகள் கொழும்புத்துறைக்கும் நவாலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நவாலியில் உள்ள A.B. தொலைத்தொடர்பு நிலையத்தில் அல்லது சின்னப்பா வீதியில் உள்ள இல்லத்தில் ஒப்படைக்கவும். (76144)

### கல்வி

O/L கணிதம் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். மற்றும் ஆண்டு 6 இலிருந்து O/L வரை சகல பாடங்களும் தனிப்பட்ட முறையில் விசேடமாகக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், 10.கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (76072)

### மரக்கன்றுகள் விற்பனை

மா, பலா, தோடை, தேசி, கமுகு, குறோட்டன்ஸ் மற்றும் பல்வகை பூங்கன்றுகள், Concrete பூச்சாடிகள், மருந்து வகைகள் மற்றும் ரோஜாப்பூ என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (76124)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி(Broiler), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (76112)

இறைச்சிக்கோழி(Broiler) மற்றும் கல்பேட்ஸ், சேவல், விறாத்துக் குஞ்சு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (76054)

இறைச்சிக்கோழி, புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சில்லறை விலை 1Kg. 150/-. இலவசமாகச் சுத்தம் செய்து தரப்படும். தொடர்பு:- இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (76102)

Broiler, Cullbirds, Cockerels இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். குறைந்த விலை, நுட்பமான நிறுவை. இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (76096)

இறைச்சிக்கோழி புறொயிலர், விறாத்து, கல்பேட்ஸ்(பாதிக்கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. 1Kg. 150/-. தொடர்பு:- அப்பன் (யாழ்.மீன்சந்தை முன்பாக) (76121)

## மருந்தக கட்டட திறப்புவிழா

யாழ்ப்பாணம்,மே.13

இணுவில் மத்திய மருந்தகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

யாழ் சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உமா சிவபாதசுந்தரம் மருந்தகக் கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

இந்தக் கட்டடத்தை எஸ். சின்னத்துரை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

(உ-3)

# மேலும் 3 எலும்புக்கூடுகள் கிளிநொச்சியில் மீட்பு

## இதுவரை 47 கண்டுபிடிக்கப்பட்டன

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பன்னங்கண்டிப் பகுதியில் உள்ள விவசாயக் கிணறு ஒன்றிலிருந்து கடந்த புதன்கிழமையன்று மூன்று எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இவை அடையாளம் காண்பதற்காக அக்கராயன் காவல் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டன.

மீட்கப்பட்ட இந்த எலும்புக்கூடுகளுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் - இதுவரையில் - 47 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8-5)

# குப்பைக்குள் இருந்த பொருள் வெடித்து சிறுவன் படுகாயம்

வவுனியா,மே13

பரந்தன் பகுதியில் கடை ஒன்றைத் துப்புரவு செய்து அந்தக் குப்பையை எரிக்கையில் அதற்குள் இருந்த மர்ம வெடிப்பொருள் ஒன்று வெடித்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்.

இந்தச் சம்பவம் கடந்த 11 ஆம் திகதி நண்பகல் பரந்தன் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் சற்குணராஜா ரஜீதன் (வயது13) என்ற சிறுவனே படுகாயமடைந்தான். இச்சிறுவன் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

(உ-8-5)

# ஊர்காவற்றுறைப் பகுதியில் 2 ஆயிரம் பேருக்கு ரூ. 5ஆயிரம்!

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள காரைநகர்ப் பகுதியில் மீளக் குடியமர்ந்த ஆயிரத்துத் தொளாயிரம் குடும்பங்களுக்கு இதுவரை மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான ஐயாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பலருக்கு காரைநகரில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை -

அசையும் அசையாச் சொத்துக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவான 25ஆயிரம் ரூபாவிற்கு விண்ணப்பித்த முந்நூற்றித் தொண்நூறு பேரில் இருநூற்று அறுபத்தொரு பேருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவும் நூற்றி இருபத்தொரு பேருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

(உ-73)

## களுவாஞ்சிக்குடியில்

# கொள்கலனில் எரிபொருள் விற்பனை செய்யத் தடை

கொழும்பு,மே13

மட்டக்களப்பில் களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்திலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் கொள்கலன்களில் எரிபொருள்கள் விற்பனை செய்வதற்குப் பொலீஸார் தடை விதித்துள்ளனர்.

வாகனங்களின் கொள்கலன்களிலேயே டீசல் உட்பட எந்த எரிபொருளும் நிரப்பப்பட வேண்டும் எனவும் பொலீஸார் உத்தரவிட்டுள்ளனர்.

இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

மண்டூர், நவகிரி, கொலனிப் பிரதேசங்களில் வயல் உழவு வேலைகள் நடைபெறும் இக்காலப் பகுதியில் இந்தக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் ஒவ்வொரு தடவையும் சுமார் இருபது கிலோ மீற்றர் தொலைவில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு டிராக்டர்களை நேரில் கொண்டுவந்தே எரிபொருள்களை பெறவேண்டியிருப்பதாக சம்பந்தப்பட்டோர் கவலை தெரிவிக்கின்றனர்.

(உ-8-5)

# கொக்குவிலில் திருட்டுச் சம்பவம்

கொக்குவில்,மே.13

புகைபோக்கித் துவாரத்தினூடாக வீட்டினுள் நுழைந்த திருடன் உறக்கத்திலிருந்த பெண்ணின் கழுத்தில் இருந்த 3 பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளான்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 12 மணிக்கு கொக்குவில் கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

சங்கிலியை அறுத்துக் கொண்டு திருடன் தப்பியோட முற்பட்ட வேளை வீட்டிலுள்ளோர் விழித்துத் திருடனைப் பிடிக்க முற்பட்டபோதிலும் திருடன் தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை திருடன் வீட்டின் ஹோல் ஜன்னல் கம்பியை வளைத்து உள்ளிறங்கி உறக்கத்திலிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவம் கடந்த வாரம் கொக்குவில் பிரம்படி ஒழுங்கைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. (உ-69)

# கல்வியியற் கல்லூரி மாணவர்கள் விடுதிகளிலிருந்து வெளியேற்றம்

காரைநகர்,மே13

தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை அடுத்து யாழ் தேசியக் கலவியியற் கல்லூரி விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அங்கு தங்கி நின்று மாணவர்களை பாதுகாப்பான முறையில் வீடுகளுக்குச் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரைகளும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குடாநாட்டின் நிலைமை வழமைக்குத் திரும்பியதும் உடன் விரிவுரைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-73)

# ஜனாதிபதி தொலைபேசியில் வாஜ்பாயுடன் தினமும் தொடர்பு

கொழும்பு,மே13

இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் தினமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வருகிறார்.

அத்துடன் 'சார்க்' பொதுநல வாய அமைப்புக்களுடனும் அடிக்கடி தொடர்பு கொண்டு அவர் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (5-8)

# காரைநகர் ஆஸ்பத்திரிக்கு நிரந்தர வைத்தியர் இல்லை

## மக்கள் பெரிதும் பாதிப்பு

காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி இன்மையால் அப்பகுதி நோயாளர்கள் பெரிதும் கஷ்டமுறுவதாக அங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது வாரத்தில் ஒரு சில நாள்கள் மட்டும் காரைநகர் கடற்படைத் தளத்தில் இருந்து வருகை தரும் சிங்கள பெண் வைத்தியர் ஒருவரே நோயாளர்களைப் பார்வையிட்டு வருகின்றார்.

சுமார் ஆறாயிரம் மக்கள் வசிக்கும் காரைநகர்ப் பகுதியின் மருத்துவத் தேவைக்காக உள்ள ஒரே ஒரு வைத்தியசாலையான இதற்குத் தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் வந்தும் சிகிச்சை பெறாமலே திரும்பிச் செல்கின்றனர்.

(உ-3-73)

# திருமலைத் துறைமுகத்தை இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்க இலங்கை தயார்

சென்னை,மே13

திருமலைத் துறைமுகத்தை குத்தகைக்கு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக இலங்கை இந்தியாவுக்கு அறிவித்துள்ளது என்று "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை இந்த விருப்பத்தை ஒரு மாதத்துக்கு முன்னர் இந்தியாவிற்குத் தெரிவித்திருந்தது என்றும் -

எனினும் இதுவரை இந்தியா இதற்குப் பதிலேதும் அனுப்பவில்லை என்றும் -

அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(இ-3)

## தற்போதைய நெருக்கடி நிலையில்

# அடிப்படை மனித உரிமைகளை அரசாங்கம் காப்பாற்ற வேண்டும்

## பட்டி வீரக்கோன் கோரிக்கை

கொழும்பு,மே13

தற்போதைய நாட்டின் நெருக்கடி நிலைமை காரணமாக அரசு அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவதிலிருந்தோ அதை நடைமுறைப்படுத்துவதிலிருந்தோ தவறிவிடக்கூடாது.

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் தான் விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளார்.

நாட்டில் தற்போது நிலவுகின்ற அவசரகால நிலை குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையிலே மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தங்களை அரசாங்கம் காப்பாற்றும் என்ற நம்பிக்கையிலுள்ள மக்களின் அபிப்பிராயத்தை ஸ்திரப்படுத்த இராணுவம் தனது வலுவை அதிகரிக்க வேண்டும்.

அதேவேளை -

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தலைதூக்க முற்படும் இனவாத, பொறுப்பற்ற சக்திகளின் நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்த வேண்டும்.

மக்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலையினை அந்த சக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த அரசு அனுமதிக்கக் கூடாது.

இன்றைய சூழ்நிலையில் நாட்டில் நிலவும் முன்னேற்றகரமான அம்சங்களை மக்களுக்குத் தெரிவித்து மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு அரசுக்கு இருக்கிறது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-8)

# 5 மீனவர்கள் கைது

கொழும்பு,மே13

வாழைச்சேனைப் பிரதேசத்தில் உள்ள வாகரையடிக் குளத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த ஐவர் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 10 ஆம் திகதி இரவு வாகரையடிக் குளத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இவர்களை வாழைச்சேனை - கொழும்பு வீதியிலுள்ள படை முகாமைச் சேர்ந்த படையினர் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

இவர்கள் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து படை முகாமுக்குச் சென்ற இவர்களின் உறவினர்களிடம் தாங்கள் எவரையும் கைது செய்யவில்லை எனப் படை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (இ-8-5)

## வலிகாமத்துக்குள்

# இடம்பெயர்ந்தோருக்கு தேவையான பொருள்கள்

## அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல்

வலிகாமத்துக்குள் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்தார்.

வலி.மேற்குப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமக்குத் தேவையான பொருள்களை கொள்வனவு செய்ய வசதியாக பத்து லொறி லோட் உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்கள் அப்பகுதிக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளன என்றும் -

மேலும் பொருள்களை அங்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

அதேசமயம் -

அந்தப் பிரதேசங்களுக்குரிய பிரதேச செயளர்களும் இடம் பெயர்ந்த மக்களின் நலன்களைக் கவனித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### நாகநாதன் கிருஷ்ணபிள்ளை

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகநாதன் - வள்ளி தம்பதியினரின் அன்பு மகன் கிருஷ்ணபிள்ளை (கொக்கோ) அரியாலையில் கடந்த 10 ஆம் திகதியன்று அகாலமரணமானார்.

பூதவுடல் கிடைக்கப்பெற்றதும் அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் அறியத்தரப்படும்.

தகவல்:
த.அன்பானந்தன் (மருமகன்)
(யாழ்.பல்கலைக்கழகம்)

655,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (13105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 3

# இவ்வாரம் உங்களுக்கு ராசி பலன் எப்படி?

13.05.2000 தொடக்கம் 19.05.2000 வரை

| | | | |
|---|---|---|---|
| | சூ வி வெ சனி | புத செ | |
| | இராசிச்சக்கரம் | | ராகு |
| கே | | | சந் |
| | | | |

*மாற்றம்: பூரம் 4ஆம் பாதம் - சந்திரன் - சிங்கம் ராசியில் நிற்கும். .05.2000 இல் - சூரியன் - இடபம் ராசியில் மாறும். நாட்டில் கடுமையான சட்டதிட்டங்கள், புதிய நடைமுறைகள் உருவாகும். போர்க்கால சூழ்நிலை - யுத்தத்தினால் மக்கள் அவதி, இடப்பெயர்வு என்பன சர்வ சாதாரணம். ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் அரசாங்கத்துக்கு சொந்தம் என்ற நிலை ஏற்படும். அயல் நாட்டின் உதவி திடீரெனக் கிடைக்கும். சமாதானப் பேச்சு முன்னெடுக்கப்படும் சூழ்நிலை உருவாகும் இந்தியா. வடக்கு - தெற்கில் அவசர நடவடிக்கைகள் எடுக்கலாம்.*

*மேற்கு நாடுகள் கிழக்கு நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் புதிய போக்கைக் கையாளும். சீனா புதிய நடவடிக்கையை தாய்வான் மீது திணிக்கும் என கிரக நிலைகள் காட்டுகின்றன.*

## மேடம்

முதலீடுகளைக் காலத்துக்கேற்பக் கூட்டிக்குறைப்பது புத்திசாலித்தனமாகும் என எவர் சொன்னாலும் உங்களுக்குப் பிடிக்காது. ஆனால் தொழில்ஸ்தானத்தில் மிக அவதானமாக இருப்பீர்கள். திடீர் திடீர் என கோபப்படாமல் நிதானமாகச் செயற்படுங்கள். சகோதரர்களுக்காக அங்குமிங்கும் ஓடித்திரிவீர்கள். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். எதிர்ப்பாளர்கள் உதவிகள் செய்வார்கள். பொதுத் தொண்டுகளால் புகழ்வரும். திடீரெனக் குடும்பத்தினர் ஒருவரின் இழப்பு அல்லது நோய் வர இடமுண்டு. சளித்தொல்லை, நரம்புச் சோர்வு, தோல் உபாதைகள் என்பன கொடுக்கும். சனீஸ்வரன் தாக்கம் உண்டு. கைகால் தாக்கம். பார்க்கும் பதவியில் இருந்து திடீரென விலக - இடமாற்ற - சூழ்நிலை வரும். எண்ணெய்த்துறை, விவசாயத்துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் நல்ல இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன், வெள்ளி.*

## இடபம்

நாட்டில் அமைதி இல்லையாயின் நாம் அவதானமாக, புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளல் வேண்டும். நீங்களும் தொழில்ஸ்தானத்தில் அவதானமாக நடந்து காசு, பணம் பெறுவீர்கள். தந்திரமாகப் பேசிப் பேசி காரியமாற்றுங்கள். புதிய இடாம்பீகச் செலவுகள் அதிகரிக்கும். அரச அதிகாரிகளால் உபத்திரவப்படவேண்டி வரலாம். இடமாற்றங்களால் பொருள் இழப்புகள் வரும். அமைதியாக இருந்து அக்கறையாக, உறுதியான நடவடிக்கைகளை எடுப்பீர்கள். தூரதேசத்துச் செய்திகளால் மனவேதனை ஏற்பட்டபடி இருக்கும். நெஞ்சுவலி, சல வருத்தங்கள், வாய்வுத்தொல்லை என்பனவற்றால் அடிக்கடி உடல் நிலை பாதிப்படையும். ஓய்வு முக்கியமாகும். சட்டத்துறை, ரீ.வித்துறை, கலைத்துறை, வியாபாரத்துறை, போக்குவரத்துத்துறை, அச்சு-வெளியீடுகள், கடல்துறை, புடைவைத்துறை போன்றவை தொடர்பானோர் நற்பலன் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன், வெள்ளி.*

## மிதுனம்

எமது வாழ்வில் அடிக்கடி இடம் மாறுவதனால் துன்பமும் விரயமும் தான் மிஞ்சும். இதை உங்கள் அவசர செயல்களால் அறியாமல் தொழில்ஸ்தானத்தில் இழப்புக்களைச் சந்திப்பீர்கள். முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும் என்பீர்கள். எதிர்பாலார்கள் நல்ல ஆதரவு தருவார்கள். அரசியலைக் கண்டபடி கண்டகண்ட இடங்களில் பேசாதீர்கள். அதனால் வீண்கஷ்டங்கள் ஏற்படலாம். உஷ்ண வருத்தங்கள், தலையிடி, காய்ச்சல், வாய்வுவாத உளைவுகள் என்பன கொடுக்கும். குருத்துறை, மருந்துத்துறை, செய்தித்துறை, கலைத்துறை போன்றவற்றுடன் தொடர்பானவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன், வெள்ளி.*

## கடகம்

சந்தர்ப்பங்களைப் பாவித்து மக்களின் அத்தியாவசியப் பொருள்களை ஒளித்து வைத்திருக்கும் வியாபாரிகளிடம் இருக்கும் பொருள்களை கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகிக்கச் செய்யவேண்டும் எனச் சிந்திப்பதில் நியாயமுண்டு. தொழில்ஸ்தானத்தில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். பலருக்கும் உதவிகளும், ஆலோசனைகளும் வழங்குவீர்கள். எதனையும் உடனே அறிந்து அதற்கேற்ற நடவடிக்கைகளைச் செய்வீர்கள். பொருள் தேடி வரும். இடாம்பீகச் செலவுகள் அதிகரிக்கும். அரச அதிகாரிகளாலும் அரசியல் கட்சித் தொண்டர்களின் உதவிகளாலும் நன்மைகள் கிடைக்கலாம். வாய்வுத் தொல்லை, சளி, உஷ்ணபீடைகள் என்பன கொடுக்கும். அரசியல்துறை, சட்டத்துறை, வியாபாரத்துறை, விவசாயத்துறை, கோயில்துறை என்பவை தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன், வெள்ளி.*

## சிங்கம்

உங்களின் திறமை முன்னேற்றம் கண்டு சிலர் வேதனைப்பட்டு வேண்டாதவைகளை தூற்றித் திரிவதனால் கவலையடையாதீர்கள். மறைமுக எதிராளிகளின் மறைமுகச் செயல்கள் மிக விரைவில் அம்பலமாகிவிடும். எனவே தொழில்ஸ்தானத்தில் உறுதியுடன் செயலாற்றுங்கள். நேர்மைக்கும் உண்மைக்கும் இலக்கணமான உங்களுக்கு சோதனைகள் வந்தாலும் இறுதிவெற்றி உங்களுக்கே கிடைக்கும். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். தாய்வழியினருடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம். நெஞ்சுப் படபடப்பு, கைகால் விறைப்பு, உஷ்ணபீடைகள் நரம்புப் பலவீனம், தோல் வருத்தம் என்பன வரும். உரசல் காயங்கள் வரலாம். கவனமாகப் போக்குவரத்தில் இருக்கவும். மருத்துவத்துறை, எண்ணெய்த்துறை, மின்சாரத்துறை ஆசிரியத்துறை, கமிஷன்துறை போன்றவற்றுடன் தொடர்பானவர்கள் நற்பலன், லாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வெள்ளி.*

## கன்னி

எய்ட்ஸ் நோய் பரப்பிகள் சிலரால், பட்டம் - பதவிகள் பெற்றவர்கள் ஒருசிலரால் படித்த சமூகம் முழுவதற்குமே வெட்கக்கேடு. அதற்காக எல்லோரையும் தவறானவர்கள் எனக் கருதுவது பிழையாகும் எனச் சிந்திக்கிறீர்களா? உண்மைதான். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ? ஆனால் நீங்கள் உங்கள் தொழில்ஸ்தானத்தில் கவனமாகச் செயற்படுவீர்கள். பொருள் சிந்தை ஏற்படும். நல்மனம் உள்ள உங்களுக்கு தெய்வசிந்தனை அதிகமாகும். சளி, வாய்வு, விறைப்பு, குடல் வருத்தம், வயிற்றுநோ என்பன வருத்தலாம். தூரதேசத்துக்கு போக எண்ணாதீர்கள். அதனால் இழப்புகள் வரும். சகோதரங்களுக்கு உடல் நிலை பாதிக்கப்படலாம். கலைத்துறை, குருத்துறை, வியாபாரத்துறை, கமிஷன்துறை சார்ந்தோர் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வெள்ளி.*

## துலாம்

சமூகத்தில் ஒருசிலர் செய்யும் தவறான செயல்களுக்கு அச்சமூகத்தவர்கள் எல்லோரையும் நாம் குறை சொல்லக்கூடாது. உங்கள் தொழில்ஸ்தானத்தில் மிக அவதானமாக இருந்து செயற்படுங்கள். தொழில்ஸ்தானத்தில் கலகலப்பாக இருப்பீர்கள். குடும்பத்தினரிடையே பலவித அபிப்பிராயபேதங்கள் ஏற்படும். பெண்களின் உதவிகள் கிடைக்கும். வீடு, வாகன சுகம் கிட்டும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நாரிநோ, உஷ்ண பீடைகள் தலைவலி என்பன கொடுக்கலாம். கலைத்துறை, குருத்துறை, மருந்துத்துறை என்பவற்றுடன் தொடர்பானவர்கள் லாபங்கள் அடைவார்கள்

*அதிர்ஷ்டநாள்: சனி, ஞாயிறு, புதன், வெள்ளி*

## விருச்சிகம்

தெய்வீகத்தன்மை உடையவர்களைக் கண்டபடி எவரும் அழைத்துவிட முடியாது. அவர்கள் காலம், தேவைகளை அறிந்தே அழைப்பவர்கள் இடங்களுக்குப் போவார்கள். உங்கள் தொழில் ஸ்தானத்தில் இப்படியானவர்களின் தொடர்பு அல்லது வருகைகளால் கலகலப்பு இருக்கும். குடும்பத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட்டு மனக்கலக்கம் உருவாகும். பித்தரோகம், தலைச்சுற்றைத் தரும் நெஞ்சுப் படபடப்பு, உஷ்ணபீடைகள், சளி, வாய்வுத் தொல்லைகள் என்பன வரலாம். எதிர்ப்பாலாருடன் அவதானமாக இருக்கவும். அல்லது வீண் பழி கேட்க நேரிடும். இடமாற்றங்கள் நன்மைகள் கொடுக்க இடம் உண்டு. இசைத்துறை, தொழில்நுட்பத்துறை, போக்குவரத்துத்துறை, சட்டத்துறை சம்பந்தப்பட்டவர்கள் லாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி, ஞாயிறு புதன், வெள்ளி.*

## மகாதேவா ஜோதிடம்

## தனுசு

நேர்மையாக வெற்றி பெறவேண்டுமாயின் ஒருவர் பல துன்பங்களைத் தாண்டித்தான் முன்னேற முடியும். இதை நீங்கள் அறியாதவரல்லர். தொழில் ஸ்தானத்தில் அசதிகள், மறதிகள் ஏற்பட்டு பல இழப்புக்கள் கொடுக்கலாம். குரு போன்ற பெரியவர்களின் ஆசீர்வாதங்களால் பல நன்மைகள் ஏற்படும். முட்டு, சளி, வயிற்றுவருத்தம் வந்து வருந்த இடமுண்டு. பொதுத் தொண்டுகள் செய்து திருப்திப்படுவீர்கள். நண்பர்களால் ஏமாற்றம் ஏற்படும். போக்குவரத்துத்துறை, வியாபாரத்துறை, செய்தித்துறை, கலைத்துறை போன்றவை தொடர்பானவர்கள் பலவித நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி, ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.*

## மகரம்

ஒருவரின் வளர்ச்சியில் மற்றவர்கள் பொறாமை கொள்வது ஏன்? தொழில்ஸ்தானத்தில் கொடுக்கல் வாங்கலில் நிதானமாக இருக்கவும். எவ்வாறாயினும் காரியங்களைச் சாதனைப்படுத்துவீர்கள். வருமானம் ஓரளவு முன்னரிலும் பார்க்க அதிகரிக்கும். குடும்பத்தில் அடிக்கடி பூகம்பங்கள் வந்தாலும் சமாளித்துக் கொள்ளுங்கள். சகோதரங்களுக்காக ஓடியாடித்திரிதலும் சகோதரங்களின் உதவிகளும் மாறி மாறி இருக்கும். குடும்பப் பிரிவு அல்லது கவலைகள் தொடரஇடமுண்டு. பிரயாணங்களைத் தவிர்க்கவும். தலைவலி, நாரிநோ, செமியாக்குணம், உஷ்ணபீடைகள் என்பன கொடுக்கும். விவசாய, வியாபாரத்துறை, சட்டத்துறை, கலைத்துறை, செய்தித்துறை போன்ற தொழில் தொடர்பானவர்களுக்கு நல்ல இலாபங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்: சனி திங்கள், வியாழன்.*

## கும்பம்

அகங்காரம் மனிதனின் ஆக்கங்களை அழித்து விடுகின்றது. எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருக்கவும். புதிய திட்டங்களால் நல்ல பலனை அடைவீர்கள். உத்தியோகத்தவர்கள் உதவி செய்வர். நன்மையைச் செய்தால் பொதுச் சேவையில் நாலு பேர் உங்களை வாழ்த்தஇடமுண்டு. தெய்வபக்தியால் தொண்டுகள் செய்தபடி இருப்பீர்கள். சளி, சிரசு வருத்தங்கள், நரம்புப் பலவீனம், வாய்வுத் தொல்லை என்பன வரும். இடமாற்றங்களால் மன ஆறுதல் ஏற்படும். வியாபாரத்துறை, கலைத்துறை, ஆசிரியத்துறை தொடர்பானவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: சனி, திங்கள், வியாழன்.*

## மீனம்

"காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்." இந்த உலகத்தில் எமக்குத் தேவையானதை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவர்களுக்கும் விடவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு உண்டு. தொழிலில் புதிய ஊக்கம். நண்பர்களின் உதவிகளால் நன்மைகள் ஏற்படும். பொருள் சேவையால் புகழ் வரும். பொருள் பிரச்சினையால் யோசனை ஏற்படும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பேசிப் பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள். வயிற்றுநோ, நரம்புச் சோர்வு, பித்த வருத்தம், முட்டு என்பன வருத்தலாம். வியாபாரத்துறை, விவசாயத்துறை, குருத்துறை, பிரயாணத்துறை போன்றவை தொடர்பானவர்களுக்கு நன்மைகளும் லாபங்களும் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்: சனி, திங்கள், வியாழன்.*

---

# காஷ்மீர் தீவிரவாதிகளுடன் இந்திய அரசு பேச்சு நடத்தும்

புதுடில்லி,மே13

காஷ்மீர் தீவிரவாதிகளுடன் இந்திய மத்திய அரசு விரைவில் பேச்சு நடத்தும் என்று மாநிலங்கள் அவையில் உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரில் நிலைமை ஓரளவுக்கு சகஜமாகி வருவதாகவும்- அந்த மாநிலத்தைப் பொறுத்தவரை எல்லை கடந்த தீவிரவாதத்தை ஒடுக்குதல், காஷ்மீர் மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றம், பேச்சுவார்த்தை ஆகிய மூன்று அம்ச அணுகுமுறையை அரசு கடைப்பிடிக்கிறது எனவும் - அவர் கூறினார்.

காஷ்மீருக்கு மத்திய அரசு உதவி மட்டுமன்றி விசேட நிதி உதவியும் அளிக்கப்படுகிறது. இது தொடர்பாக அமைச்சரவை செயலர் தலைமையில் நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எனவும் அவர் தெரிவித்தார்.

(உ-8-5)

**உலக அரங்கில்**

### செச்சினிய தீவிரவாதிகளுடனான

# யுத்த நிறுத்தக் கோரிக்கையை ரஷ்யா அடியோடு நிராகரித்தது

மொஸ்கோ,மே13

செச்சினிய தீவிரவாதிகளுடன் ரஷ்யப் படைகள் யுத்த நிறுத்தம் ஒன்றை செய்து கொள்ள வேண்டுமென்று ஐரோப்பிய கவுன்ஸில் விடுத்த கோரிக்கையை ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் நிராகரித்தார்.

ஐரோப்பிய கவுன்ஸில் ரஷ்யாவை மட்டும் யுத்த நிறுத்தம் செய்யக் கோருவது நியாயமற்றது என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் - "கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற ஐரோப்பிய கவுன்ஸிலுடனான பேச்சுக்கள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன. இந்தக் கவுன்ஸில் பரிந்துரைத்த நியாயமான வழிமுறைகளை ரஷ்யா நிச்சயம் பின்பற்றும்" - என்றார்.

இதேவேளை - சாஸ்பூட் நகரில் ஐரோப்பியக் கவுன்ஸிலின் வெளிநாட்டு அமைச்சர்கள் கூடி செச்சினியா மீது ரஷ்யா இழைக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து விவாதித்தனர்.

ஐரோப்பியக் கவுன்ஸிலில் இருந்து ரஷ்யா நீக்கப்படுவதற்கு சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாக உள்ளபோதும் இந்தகைய மனித [illegible] ரஷ்யா கண்டிக்கப்படலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### சியராலியோனில்

# அரசுப் படைகள் சுட்டு ஐ.நா.படைகள் காயம்

### தவறுதலாக நடந்த சம்பவமாம்

சியராலியோன்,மே 13

சியராலியோனில் ஐ.நா. படையினர் மீது அந்த நாட்டுப் படைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஐந்து ஐ.நா. படையினர் காயமடைந்தனர்.

தீவிரவாதிகளே ஐ.நா. படையினரின் உடையில் வருவதாக எண்ணித் தாம் தாக்குதல் மேற்கொண்டதாகச் சியராலியோன் படையினர் கூறினார்கள்.

இந்தச் சம்பவத்தில் ஐ.நா படையில் இடம்பெற்றுள்ள கென்ய நாட்டுப் படையினரே காயமடைந்தனர்.

அங்கு ஐ.நா. சமாதானப் படையினரை தீவரவாதக் கிளர்ச்சிப் படையினர் பிடித்துச் சென்றுள்ளதை அடுத்து பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

(உ-8-5)

### நியூ மெக்ஸிக்கோவில்

# அணுசக்தி நிலையமும் காட்டுத் தீயால் பாதிப்பு?

லண்டன்,மே.13

நியூ மெக்சிக்கோவில் ஒரு வார காலமாக கொழுந்து விட்டு எரியும் காட்டுத் தீயினால் நூற்றுக்கணக்கான வீடுகள் முற்றாக எரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நியூ மெக்சிக்கோவிற்கு அருகிலுள்ள அணுசக்தி நிலையத்தினையும் கூட இந்தக் காட்டுத்தீ தாக்கக் கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

காட்டுத்தீ காரணமாக இந்த நகரத்தின் மூன்றில் இரண்டு பங்கு பிரதேசம் சேதமடைந்ததுள்ளதுடன் 11ஆயிரம் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

(உ-5-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 04

# குடாநாட்டின் 5 லட்சம் மக்களுக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்குங்கள்!

## தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தியாவிடம் கோரிக்கை

கொழும்பு,மே13

**யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள ஐந்து லட்சம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை இந்தியா வழங்கவேண்டும்**

**- தமிழர் விடுதலைக் கூட்டணி தூதுக்குழு ஒன்று இந்தியத் தூதர் சிவ்சங்கர் மேனனைச் சந்தித்து மேற்கண்டவாறு கோரியுள்ளது.**

கூட்டணியின் .சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான குழுவே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இந்தக் குழுவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், மாவைசேனாதிராசா மற்றும் பி.செல்வராசா, செ. துரைராஜசிங்கம், மற்றும் யாழ்.மாநகரசபை பதில் மேயர் என் ரவிராஜ் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இந்தக் குழு முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு :-

* சுமார் ஐந்து லட்சம் பேரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

* வடபகுதி மக்களுக்கான உணவுப்பொருள்களும் மருந்துப் பொருள்களும் தடையின்றி தொடர்ந்து விநியோகிக்கப்பட வேண்டும்.

* மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதற்கு இடமளிக்கக் கூடாது. (உ-3-4-8)

## 40 ஆயிரம் படையினரைப் பாதுகாப்பதோடு யாழ்.மக்களின் உயிர், உடைமைக்கும் அரசு உத்தரவாதம் தர வேண்டும்

### நாடாளுமன்றத்தில் ரணில் கோரிக்கை

கொழும்பு,மே13

யாழ்.குடாநாட்டில் சிக்குண்டுள்ள 40 ஆயிரம் படையினருக்கும் உணவு மற்றும்மருந்துப் பொருள்களை அனுப்புவதுடன், அங்குள்ள ஐந்து லட்சம் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

இப்படிக்கோரியுள்ளார் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தில் நேற்றுஉரையாற்றிய சமயமே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நடக்கும் சண்டையை உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்துகொண்டிருக்கின்றன. தற்சமயம் இடம்பெறும் யுத்தம் இலங்கையர் மத்தியில் காணப்படும் இனஐக்கியம், ஒற்றுமை ஆகியவற்றை எந்தவகையிலும் பாதிக்கக் கூடாது.

போரில் காயமடையும் கிராமப்புறப் படையினரை கிராமப் புற வைத்திசாலைகளில் சிகிச்சைக்கு சேர்ப்பிப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால் அவர்கள் உரிய சிகிச்சையை பெறமுடியாத நிலை உருவாகியுள்ளது. என்றார். (உ-3-4-8)

## யாழ்.ஆஸ்பத்திரி நோயாளரில் 90 வீதமானோர் வெளியேறினர்

### இப்போது 30பேரே அங்கு தங்கியுள்ளனர்

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.ஆஸ்பத்திரி வார்ட்டுக்களில் சிகிச்சை பெற்றுவந்த முன்நூறு நோயாளிகளில் முப்பது பேரைத்தவிர ஏனையோர் அதாவது தொண்ணூற்று வீதமான நோயாளர்கள் வெளியேறிவிட்டனர்.

சிகிச்சையின் பின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டு, ஊரடங்கு காரணமாக அங்கிருந்து வெளியேறமுடியாமல் தங்கியிருந்த நோயாளர்கள் நேற்றுக் காலை ஊரடங்கு தளர்த்தப்பட்டதை அடுத்து அவசர அவசரமாக வீடு திரும்பினர்.

அவர்களுடன் சேர்ந்து வேறு நோயாளர்களும் தமது உடைமைகளை எடுத்துக்கொண்டு வைத்தியசாலையிலிருந்து வெளியேறினர்

கடுமையான நோய்களுக்கு உள்ளாகி வெளியேற முடியாத நிலையிலுள்ள 30பேர் மட்டும் தொடர்ந்து தங்கியுள்ளனர். இவர்கள் 16,18ஆம் வார்ட்டுக்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பிரசவத்துக்குக் காத்திருந்த பத்துத் தாய்மார் மந்திகை வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதேசமயம்-

யாழ்.ஆஸ்பத்திரியை உடன் மூடும் சூழ்நிலை இல்லை என்றும்-

27 டாக்டர்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் தொடர்ந்து பணி புரிகின்றனர் என்றும் -ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-139)

### இலந்தைக் குளத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட

## தந்தை, மகனின் சடலங்கள் உறவினரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,மே13

கொழும்புத்துறை இலந்தைக் குளம் பகுதியில் நேற்று முன்தினம் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த தந்தை, மகன் ஆகியோரின் சடலங்கள் நேற்று அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஆட்டுக்குக் குழை ஒடித்துக் கொண்டிருந்த சமயம் நிரோஷன் என்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவனும், அவனது தந்தையான குணரட்னம் என்பவரும் சீருடையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தமை தெரிந்ததே.

இருவரது சடலங்களும் பதில் நீதிவான் க.கேசவனின் உத்தரவின் பேரில் அவரது உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டன. (உ-3-139)

### ஊரடங்கு நீக்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது பொருள்களை லொறிகள் மற்றும் வாகனங்களில் ஏற்றி அப்புறப்படுத்தும் பணியில் யாழ்.நகர வர்த்தகர்கள் ஈடுபட்டிருந்தனர்.

கிடைத்த நான்குமணிநேர அவகாசத்துக்குள் இயன்றளவு பொருள்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்மாற்றிவிடவேண்டும் என்ற அவசரத்தில் வர்த்தகர்களும் பொதுமக்களும் முண்டியடித்ததாலும்-

இடம்பெயரும் பொதுமக்களின் போக்குவரத்த நெரிசலாலும் -

யாழ்.நகரப்பகுதி அல்லோலகல்லோலப்பட்டது.

யாழ்.நகரத்திலிருந்து கே.கே.எஸ். வீதி, பிறவுண் வீதி வழியாக வெளியிடங்களுக்குச் செல்லும் தட்டாதெருச் சந்தி, கலட்டிச் சந்தி ஆகியவற்றிலும் நெரிசல் ஏற்பட்டது.

யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதி, கல்வியன்காடு, திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களிலிருந்து மக்கள் கால்நடையாகவும் சைக்கிள்கள் வாகனங்ளிலும் இடம் பெயர்ந்தவண்ணம் இருந்தனர்.

வட்டுக்கோட்டை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கே பெரும்பான்மையான மக்கள் இடம் பெயர்ந்தனர்.

மக்கள் தம்முடன் கால்நடைகளையும் கொண்டு சென்றதை அவ தானிக்க முடிந்தது.

இடம்பெயர்ந்த மக்களின் தாகத்தைத் தீர்ப்பதற்காக மருத்துவ பீட மாணவர்கள், யாழ்.நகரமைய றோட்டறிக் கழகத்தினர் மற்றும் பொது நிறுவனப் பிரதிநிதிகள் தாகசாந்தி நிலையங்களை அமைத்திருந்தனர்.

இடம்பெயர்ந்து சென்ற மக்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதில் பொது அமைப்பினர் முன்னின்று செயற்பட்டனர்.

வலிகாமத்திலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்களிலும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்தனர். (உ-3-4-69-139)

### படைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கடிதத்தில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எப்போதும் படையினருக்கு பொறுப்பாக நிற்பது கடமையும் தார்மீகப் பொறுப்புமாகும். அந்தப் பொறுப்பை நிச்சயம் நிறைவேற்றுவேன்.

உறுதியான எந்த அரசாங்கமும் நாட்டு மக்களின் பாதுகாப்பையும் ஐக்கியத்தையும் உறுதி செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயங்காது.

அண்மையில் ஏற்பட்ட பின்னடைவுகளை மறந்து எதிரியை [illegible] திடசிந்தையுடன் போராடுவதற்கும் படையினர் அணிதிரள வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-4-5-8)

### இலங்கையின்

## இனப்பிரச்சனைக்கான தீர்வு இலகுவில் எட்டக்கூடியதல்ல!

### நோர்வே அரசுப் பிரதிநிதி கருத்து

கொழும்பு,மே13

"இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு இலகுவாக எட்டக்கூடியதொன்றல்ல" - இவ்வாறு இலங்கைப்பிரச்சினை தொடர்பான நோர்வே அரசின் ஆலோசகர் எரிக் சொலமன் தெரிவித்தார்

இந்திய அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் இரவு பேச்சுக்களை நடத்திய பின்னர் கொழும்பு வந்த அவர் அங்கு செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்தியாவில் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின்போது இலங்கை இனப்பிரச்சினையின் ஆழம், அதன் தாக்கம், அதில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றை உணர முடிந்தது.

"இதை நோக்கும்போது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறுவது இலகுவானதல்ல என்பதை உணர்கிறேன்.

"இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சிறுபான்மைத் தமிழர்களின் அபிலாஷைகளை நன்கு உணர்ந்துள்ள இந்தியா, இதில் முக்கிய பங்காளியாகச் செயற்படவேண்டும்.

"இதற்கான கோரிக்கையை இந்திய அதிகாரிகளிடம் விடுத்தேன் அதற்குப் பூரண ஆதரவு வழங்க அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்" - இப்படி அவர் கூறினார் (உ-3)

## இலங்கையும் இந்தியாவும் கூட்டு விமானப் பயிற்சி!

### இரு தளபதிகளும் இணக்கம்

கொழும்பு,மே13

இலங்கை - இந்திய நாடுகளின் விமானப்படையினர் கூட்டு விமானப் பயிற்சிகளை மேற் கொள்ளவிருக்கின்றனர்.

கொழும்பு வந்த இந்திய விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் டிப்பினிஷும் இலங்கை விமாப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஜயலத் ஜெயக்கொடியும் நடத்திய பேச்சுக்களில் இந்த விடயம் ஆராயப்பட்டு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிகள் குறித்து இரு தளபதிகளும் விரிவாக ஆராய்ந்தனர் என்றும்-

பயிற்சிக்கான ஏற்பாடுகள் குறித்து மேலும் பேச்சுக்களை நடத்துவதற்காக இலங்கை 'விமானப் படைத் தளபதி இந்தியா செல்லவுள்ளார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

ஐந்து நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு இந்தியத் தளபதி நேற்று இந்தியா திரும்பினார். (உ-3)

### தமிழ்க்கட்சிகள் தூதருடன் பேசும்

இலங்கைக்கான இந்தித்தூதுவர் சிவ்சங்கர் மேனனை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் குழு நாளை மறுதினம் திங்கட்கிழமையும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் மனோ கணேசன் எதிர் வரும் 17 ஆம் திகதி புதன்கிழமையும் சந்திக்க உள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழு நேற்று அவரைச் சந்தித்தது குறிப்பிடத் தக்கது. (உ-8-4)

### இஸ்ரேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வனவு செய்ய இலங்கை அரசு அந்த நாட்டுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளதாக இஸ்ரேலில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விமானங்கள் கொழும்புக்கு வந்து சேர்ந்துவிட்டதாக ஊர்ஜிதம் அற்ற செய்திகள் தெரிவித்தன.

ஏற்கனவே ஆறு கிபிர் குண்டு வீச்சு விமானங்களை இலங்கை விமானப்படை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் - பாகிஸ்தானில் இருந்து அதி நவீன ஆயுதங்களை கொள்ளவனவு செய்ய அந்த நாட்டுடன் இலங்கை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

பல அளவுகளில் பல் குழல்எறிகணைச் செலுத்திகள் உட்பட இந்த அதிநவீன ஆயுதங்கள் இந்தக் கொள்வனவில் அடங்கும்.

இந்த ஆயுதங்களும் இலங்கைக்கு வந்து சேர்ந்து விட்டதாக கூறப்படுகின்றது. (உ-3-4)

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

மானிப்பாய்,மே13

மானிப்பாய் சாயி இன்ஸ்ரிரியூட் நிறுவனத்தின் தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்நிதினராக சட்டத்தரணி இ. வசந்தசேனன் கலந்து சான்றிதழ்களை வழங்குவார். (உ-8-90)

### நேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி படைத்தளபதிகளுடன் தொடர்புகொண்டு கேட்டதை அடுத்தே ஊரடங்கு தளர்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் - வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் வழமையான பணிகள் இடம்பெற்றன. அப்பகுதிகளில் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் ஓரளவு இயங்கின. போக்குவரத்து சுமாராக நடைபெற்றது. (உ-3-4)

### படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்குப்பிட்டி இறங்குதுறையில் நடத்தப்பட்ட தாக்குதலில் அ[illegible]யாலை யுத்தமுனையில் புலிகளுக்கான விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு, சங்குப்பிட்டி முதல் அரியாலைவரை புலிகளின் விநியோகப்பாதை செயற்படுவதை உறுதிப்படுத்தவதாகவும் - தனங்களப்பு, கோயிலாக்கண்டி பகுதிகள் ஊடான இந்த விநியோகப் பாதை செய்றபடுவதால் இந்த இரு பகுதிகளும் புலிகளின் வசம் இருப்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேநேரம் செம்மணி உப்பளப் பகுதியிலும், நாயன்மார்கட்டுக்குத் தென்கிழக்குப் பகுதியிலும் நேற்று நேருக்கு நேர் மோதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-4-8)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org